ஜூன், 1936

Rm211,N33 5P
N36.3-10
199515

# சன்மார்க்க தர்சனி

Vol. 3. JUNE 1936. No. 10.



பத்திராசிரியர்: சாஸ்திர ரத்னம் தேநிநூர் ஸுப்ரமணியசாஸ்திரிகள்.
மதுரை (S. I.)

தமிழ்நா
199515

உ

# ஸாவித்ரிதேவியின் உபாக்யானம்

முன் ஸஞ்சிகை தொடர்ச்சி.

---

இனிமேல் ஸாவித்ரிக்கு ப்ரம்ம ஸாக்ஷாத்காரம் உண்டாகும்படி மஹா வாக்ய உபதேசம் பண்ணி அவளை க்ருதார்த்தையாக நாம் செய்தாலொழிய நம்மிடத்திலும் ஔதார்யமென்ற உத்தமகுணம் இருப்பதாக ஸாவித்ரியானவள் நினைக்கக்கூடும். இல்லாவிடில் நம்மை பரமலோபி யென்றே நினைப்பாள். ஆகையால் ஸாவித்ரிக்கு ப்ரம்ம வித்தையை உபதேசம் செய்து நமது ஔதார்யத்தை ப்ரகாசப்படுத்தவேண்டுமென்ற எண்ணத்துடன் தர்மராஜனே ஸாவித்ரிக்கு மஹாவாக்ய உபதேசம் செய்தான்.

அதாவது ஸாவித்ரியினுடைய திவ்யஞானத்தைக்கண்டு தர்மராஜன் மகிழ்ந்து 'வத்ஸே!' என்று ஸாவித்ரியை ஸம்போதனம் பண்ணி அழைத்தான். 'வத்ஸே' என்று தனது பெண்ணைத்தான் கூப்பிடக்கூடும். அந்த பதத்தை ஸாவித்ரியிடத்தில் தர்மராஜன் உபயோகப்படுத்தினதால் ஸாவித்ரியை தனது பெண்ணாகவே பாவித்துவிட்டான். இதனால் ஸாவித்ரிக்கு பரமஸந்தோஷம் உண்டாயிற்று. தர்மராஜனே நம்மை தன் பெண்ணைக் கூப்பிடுகிறதுபோல கூப்பிட்டுவிட்டான். இனிமேல் நமது பர்த்தாவை தர்மராஜா கொண்டே போகமாட்டான். யமனுடைய பெண் விதவையாகக் கஷ்டப்படுகிறாளென்றால் அது யமனுக்குத்தானே மானக்குறைவு.

அதனால் தர்மராஜன் நம் பர்த்தாவை நம்மிடத்தில்தான் ஒப்பிவித்துவிட்டு போவான். ஆகையால் நம்முடைய ஸௌமங்கல்யத்திற்கு குறைவேயில்லையென்று எண்ணி ஸந்தோஷப்பட்டாள்.

தர்மராஜனும் வத்ஸே என்ற ஸம்போதனத்தால் ஸாவித்ரியை அழைத்து அம்மா! பரப்ரம்மம் ஒன்றுதான் ஸத்யமான வஸ்து. இந்த ப்ரபஞ்சத்திற்கும் ப்ரம்மம் தான் காரணமாகும். காரணத்திற்கும் வேறாக கார்யத்திற்கு ஸத்தையே இல்லை. ம்ருத்துக்கு வேறாக ம்ருத் விகாரமான கடசராவாதிகளுக்கு தனி ஸத்தை உண்டா? எல்லா ஜகத்தும் ப்ரம்ம ஸ்வரூபந்தான் அந்த ப்ரம்மமோ, பிறப்பு, இறப்பு என்று இல்லாததான அகண்ட ஆனந்த ரூபமான வஸ்துவாகும். அந்த ப்ரம்மத்தைக் காட்டிலும் உன் பர்த்தாவினுடைய ஜீவன் வேறில்லை. ப்ரம்மத்திற்கு நாசமில்லாமலிருக்கும்பொழுது அந்த ப்ரம்மத்தை ஸ்வரூபமாக உடைத்தான உன் பர்த்தாவினுடைய ஜீவனுக்கும் நாசமில்லை. உன் பர்த்தா எப்பொழுதும் நித்யமான வஸ்துவாகத்தான் ஆகிறான். ஜீவனிடத்தில் தோன்றுகிற கர்த்ருத்வம், போக்த்ருத்வம், ஸம்ஸாராதி தர்மம் ஜீவனுடைய ஸ்வாபாவிக தர்மமல்ல. அவ்விதமே ஜீவனிடத்தில் தோன்றுகிற ஜன்ம மரணங்களும் ஜீவனுக்கு ஸ்வாபாவிகமல்ல. பூர்வ கர்மாவினாலே உண்டு பண்ணப்பட்ட சரீரத்தைச் சேர்ந்ததாக ஜன்ம மரணங்களுமாகிறது. சரீரத்திற்கும் ஆத்மாவுக்கும் உள்ள தர்மங்களினுடைய விவேகமில்லாதகாரணத்தால், தேஹத்தையே ஆத்மாவென்றும், ஆத்மாவையே தேஹமென்றும் அத்யாஸம்செய்துகொண்டு தேஹ தர்மமாகிய ஜனன மரணங்களை ஆத்மாவினிடத்தில் ஆரோபணம் செய்துகொண்டு, "தேவதத்தன் பிறந்தான் யக்ஞதத்தன் மறித்தான்" என்று வீணாக அவிவேகிகள் புலம்புகிறார்கள். உண்மையிலோ ஆத்ம ஸ்வரூபம்



நிர்விகாரமாயும், நிஷ்களமாயும், நிரஞ்சனமாயும், நிரீஹமாயும், நிஷ்க்ரியமாயும், ஸர்வகதமாயும் விளங்கிவருகிற பரதத்வமாகவே ஆகும். இவ்விதமான ஆத்மாவினுடைய தத்வஞானந்தான் மோக்ஷமென்ற பரமபுருஷார்த்தத்திற்கும் ஸாதனமாகிறது. ஆகையால் ஆத்மஸ்வரூபம் ஏகமாயும் நித்யனாயுமிருப்பதினால் ஆத்மவிஷயமான துக்கத்திற்கே அவகாசமில்லாததினால், உன் பர்த்தாவைப்பற்றி நீ யாதொரு விதமான துக்கத்தையும் அடையவேண்டாம் என்று வெகு ப்ரகாரமாக நிஷ்க்ரிய ஆத்ம விக்ஞானத்தை தர்மராஜன் ஸாவித்ரிக்குப் போட்டினான். பிறகும் உனக்கு எந்தவிதமான ஸந்தேஹங்களை நிவர்த்தி செய்துகொள்ளவேண்டுமென்று தோன்றுகிறதோ அதையும் என்னிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாமென்று சொன்னான்.

ஸாவித்ரியும் தர்மராஜனுடைய உபதேசத்தைக்கேட்டு பரம ஸந்தோஷத்தை அடைவதோடும் கூட கர்ம ஸ்வரூபத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ள ப்ரச்னம் பண்ணினாள். கர்மாவினுடைய ஸ்வரூபமென்ன? கர்மா எத்தனை விதமான பிரிவோடு கூடினது. அதனுடைய பலன் என்ன என்று கேட்டாள். தர்மராஜனும் அந்த ப்ரச்னத்திற்குப் பதிலளித்தார். அதாவது, வேதமென்பது அநாதியாயும் அபௌருஷேயமாயும் ஸ்வயமாகவே ப்ரதான பூதமாயும் உள்ள ஒரு பெரிய நூலாகும். அது ஸர்வேச்வரனான பகவானுடைய திருவாக்காயுமாகிறது. அந்த வேதந்தான் கர்மாவைப் ப்ரகாசம் செய்துவைக்கிறது. அந்தக்கர்மாவோ, புண்யகர்மா, பாபகர்மா என்று இருவகையுண்டு. வேதத்தில் "செய், செய்யத்தகுந்தது, செய்ய வேண்டும்" என்று சொல்லப்படுகிற சோதனையே (ஏவுதல்) புண்ய கர்மாவுக்கு ஸ்வரூபமாகும். இந்த வேதத்திலேயே "செய்யக்கூடா"தென்று சொல்லப்பட்ட ப்ரதிஷேதமே (தடையே) பாப கர்மத்

தின் ஸ்வரூபமாகும். அந்த புண்ய கர்மங்களுக்குள் நித்யம், நைமித்திகம், காம்யம் என்று மூன்று வகையுண்டு. பாப கர்மங்களுள் பலவகையுண்டு. புண்ய கர்மாவைச் செய்தவர்களுக்கு ஸ்வர்கம் முதலான லோகங்களில் திவ்யஸுகமும் பாப கர்மங்களைச் செய்தவர்களுக்கு "ஸம்யமிநீ" என்று சொல்லப்படுகிற என்னுடைய ராஜதானியிலிருக்கும் வெகு விதமான நரகங்களில் துக்கத்தை அனுபவிக்கும்படியாய் நேரிடுகிறது. புண்யத்தை மாத்திரம் செய்தவர்களுக்கு தேவ ஜன்மாவும் பாபத்தை மாத்திரம் செய்தவர்களுக்கு பசு, பக்ஷி, ம்ருகாதி ஜன்மாவும், புண்யம் பாபம் இவைகளிரண்டையும் செய்தவர்களுக்கு மனுஷ்யஜன்மாவுமாகவும், கர்மாவுக்குத் தகுந்தபடி ஜன்மாவிலும் பேதங்களுள்ளன என்றதை சொல்லிவிட்டு, கர்மவிபாக காண்டப்ரகாரம் சுபகர்மபரிபாகத்தையும் அசுப கர்மபரிபாகத்தையும் விஸ்தாரமாக எடுத்து வர்ஷித்துவிட்டு ஸாவித்ரிக்கு தன்னிடத்திலுள்ள பரம பக்தியையும் தான் உபதேசிக்கிற ஸூக்ஷ்மமான அர்த்தத்தை க்ரஹித்துக்கொள்ளும் சக்தியையும் தன்னை ஒரு பெரிய பரம ஆப்தனென்று எண்ணியிருக்கும் அவளுடைய மனோபாவத்தையும் அறிந்து காலன் ஸந்தோஷத்தால் ஸத்யவானையும் ஸாவித்ரியினுடைய வசமாகவே திருப்பிக்கொடுத்துவிட்டான். ஸத்யவானைத் திரும்பி அடைந்து பரமஸந்தோஷத்தை தெரிவித்தபொழுது தர்மராஜனும் இன்னும் உனக்கு வேண்டிய வரனைக் கேட்டுக்கொள்ளலாமென்று சொன்னான். ஸாவித்ரியும் தனது பர்த்தாவான ஸத்யவானோடுகூட தான் அநேக வருஷங்கள் ரமித்துக்கொண்டிருக்கவேண்டுமென்றும், நூறு பிள்ளைகள் ஸத்யவானிடத்தில் தனக்கு ஏற்படவேண்டுமென்றும், தன் தகப்பனார் அச்வபதி மஹாராஜனுக்கும் நூறு பிள்ளைகள் பிறந்து சிரஞ்சீவி



களாகவும் இருக்கவேண்டுமென்றும் என் மாமனாரான த்யுமத்ஸேநனுடைய ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டு தன் மாமனாரைக் காட்டிற்கு விரட்டின ஸாமந்த ராஜாக்கள் அவர்களாக ராஜ்யத்தை திருப்பி தன் மாமனாரிடம் கொடுத்துவிடவேண்டுமென்றும் தன் மாமனாருக்குக் கண்கள் நன்றாய்த் தெரியவேண்டுமென்றும், தனக்கு வரனைக் கேட்டுக்கொண்டாள். தர்மராஜனும் ஸாவித்ரியின் அபீஷ்டமான வரன்களைக் கொடுத்துவிட்டு லக்ஷம் வருஷம் பூமியில் ஸத்யவானோடு கூட பரம ஸுகமாக இருந்துவிட்டுபிறகு பரதேவதையினுடைய லோகத்தை அடைந்து மோக்ஷாநந்தத்தையும் அநுபவிப்பாயென்று சொல்லிவிட்டு தர்மராஜன் தன் லோகம் போய்விட்டான். ஸாவித்ரியும் ஸத்யவானென்ற பர்த்தாவோடு கூட தனது ஆச்ரமம் வந்து த்யுமத்ஸேனனிடத்திலும் ஸ்வஜனங்களிடத்திலும் சொல்லி ஸந்தோஷப்பட்டாள். இந்த உபாக்யானத்தால் நமது புண்ய பூமியான பாரத நாட்டில் ஸ்திரீகளுக்குள்ள பாதிவ்ரத்யமே ஜகத்தைப் பாதுகாக்க முக்ய தபஸாக ஆகிறதென்று தெரிகிறது. இவ்விதமான புண்யவதியான ஒரு பதிவ்ரதா ஸ்த்ரீயும் நம்முடைய பாரத நாட்டில் இருந்து லோகத்தை ரக்ஷித்து வந்திருக்கிறாள் என்பதை அறிந்து ஒவ்வொருவரும் அவ்விதமான தர்மத்தில் அநவதானத்தை அடையாமல் இருக்கவேண்டும்.

( முற்றிற்று )

**1—9—1936**-ௗ முதல்

## 4-வது ஆண்டு துவங்குகிறது.

வருஷ சந்தா ரூ 1—0—0 (மதுரைக்கு)

1—6—0 வெளியூர்களுக்கு.

(40 பக்கங்களுடன் வெளிவரும்).

எல்லா சந்தாதார்களும்

சீக்ரம் சந்தாவை அனுப்பிவையுங்கள்.

**மானேஜர்,**

82, புதுத்தெரு, மதுரை.

உ

# ஆத்ம விசாரம்

அறம், பொருள், இன்பம், வீடு என்று தென்மொழியில் சொல்லப்படும் நான்கு விதமான புருஷார்த்தர்களுக்குள் வீடு என்று சொல்லப்படும் மோக்ஷந்தான் பரமபுருஷார்த்தமாகும். அந்த மோக்ஷத்திற்கு ஆத்மஞானமே அந்தரங்க ஸாதனமாகவே ஆகும். அந்த ஆத்மஸ்வரூபமோ அன்னமயம், ப்ராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆநந்தமயம் என்று சொல்லப்படுகிற ஐந்துவிதமான கோசங்களுக்கு விலக்ஷணமான வஸ்துவாகும். அன்னமயகோசமென்றால் ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற பஞ்சபூதங்களால் உண்டுபண்ணப்பட்டு த்ருச்யமாக விளங்கிவரும் ஸ்தூல சரீரமேதான் ஆகும். இந்த சரீரமானது அன்னத்தாலேயே வளர்கிறபடியாலும் தாய், தந்தை சாப்பிட்ட அன்னமானது வீர்யமாக ஆகி, அதினின்றும் இந்த சரீரம் உண்டானதினாலும் அன்னரஸ விகாரமானதால் அன்னமயமென்று சொல்லப்படுகிறது. இவ்விதம் அன்னமயமென்று சொல்லப்படுகிற தேஹமும் ஆத்மாவாக ஆகாது. தேஹமோ பஞ்சபூதங்களினின்று உண்டான வஸ்துவானதால் கார்ய வஸ்துவாக ஆகிவிட்டது. ஆத்மாவோ ஸகல ஜகத்திற்கும் காரணமாகிறது. சரீரமானது கார்யகோடியில் சேர்ந்ததோடு கூட ஜடமாயும் ஆகிறது. அத்துடன் தேசத்தாலும் காலத்தாலும் வஸ்துவாலும் பரிச்சேதத்தையும் அடைகிறது. எல்லா தேசத்திலும் ஒரு தேஹமிருக்குமா. ஒரு தேஹமானது ஒரு தேசத்திலிருந்தால் மற்றொரு தேஹம் மற்றொரு தேசத்தில் இல்லையென்பது அனுபவ

ஸித்தமாகிறது. அதனால் தேச பரிச்சேதம் தேஹத்திற்கு ஏற்பட்டு விட்டது. எல்லாக் காலத்திலும் தேஹமிருக்கிறதாகவுமில்லை ஒரு காலத்திலிருந்தால் மற்றொரு காலத்தில் இல்லாமலும் ஆகிறது. அதனால் தேஹத்திற்கு காலத்தாலும் பரிச்சேதம் உண்டு. அத்துடன் தேஹமோ ஒரே ஜாதியில் சேர்ந்ததில்லை. விசித்ரமான பல ஜாதிகளாக இருக்கிறது. ம்ருகதேஹம், மனுஷ்யதேஹம், பக்ஷி தேஹம் என்று பலஜாதியாக தேஹம் காணப்படவில்லையா. அதனால் வஸ்துவாலும் தேஹத்திற்கு பரிச்சேதம் ஏற்படுகிறது. இவ்விதம் தேசத்தாலும், காலத்தாலும், வஸ்துவாலும் பரிச்சேதமுள்ளதாக இருக்கிறபடியால் சரீரமானது பரிச்சின்னமாக ஆய்விடுகிறது. அத்துடன் சரீரம் அறிவுக்கு விஷயமாகிறபடியால் த்ருச்யமாயும் ஆய்விடுகிறது. இவ்விதம் கார்யமாயும், ஜடமாயும், பரிச்சின்னமாயும் த்ருச்யமாயும் உள்ள தேஹமானது அகார்யமாயும் சேதனமாயும் அபரிச்சின்னமாயும் அத்ருச்யமாயுமுள்ள ஆத்மாவாக எப்படி ஆக முடியும். ஆகையால் ஆத்மவஸ்துவானது அநுவ்ருத்தமாயும் தேஹமானது வ்யாவ்ருத்தமாயும் காணப்படுகின்றன. ஸுஷுப்தியிலும் ஸமாதியிலும் ஆத்ம வஸ்துவானது ப்ரகாசித்து வருகிறது. அந்த இரண்டு அவஸ்தைகளிலும் தேஹமானது தூங்குகிறவனுடைய த்ருஷ்டியை அனுஸரித்தும் ப்ரகாசிக்கிறதில்லை. அவ்விதம் ஜாக்ரம், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளிலும் ஆத்மாவானது அநுவ்ருத்தித்துக்கொண்டு வருகிறது.

ஸ்தூல சரீரமோ மூன்று அவஸ்தைகளிலும் அநுவர்த்திக்க வில்லை. இவ்விதம் சரீரம் வ்யாவ்ருத்தமாயும் ஆத்மா அநுவ்ருத்த மாயும் அநுபவிக்கப்படுகிறபடியால் வ்யாவ்ருத்தமான சரீரமா ஆத்மா ஆகாது. அநுவ்ருத்தமான ஆத்மாவாகவும் வ்யாவ்ருத்



மான சரீரமாகாது. இவ்விதம் தேஹத்திற்கும் ஆத்மாவிற்கும் பரஸ்பரம் வைலக்ஷண்யமானது ப்ரஸித்தமாக இருக்கிறபடியால் ஆத்மாவானது அன்னமய கோசமென்று சொல்லப்படுகிற தேகத்திற்கு விலக்ஷணமான வஸ்துதான். அவ்விதமே ப்ராணமய கோசத்திற்கும் ஆத்மா விலக்ஷணமே. வாக்கு, பாணி, பாத, பாயு, உபஸ்தம், என்ற ஐந்துவகையாயுள்ள கர்மேந்த்ரியமும் ப்ராணனும் சேர்ந்து ப்ராணமய கோசமென்று சொல்லப்படும். ப்ராணன் க்ரியாசக்தியில் ப்ரதானமானதால் மேல்சொன்ன கருவிகளும் ஒரு க்ரியை செய்ய அவச்யமானதாலும், மேல்சொன்னது ப்ராணமய கோச சப்தத்தால் சொல்லப்படும். அந்த ப்ராணமய கோசமும் ஜடமாகத்தான் லோகத்தில் அநுபவிக்கப்படுகிறது. துருத்தியிலும் காற்றைப் பார்க்கிறோம். அது ஆத்மாவாக ஆகுமா ஜடமோ சேதனமோ ஒன்றாக ஆகாது. ப்ராணனோ, மற்ற கர்மேந்த்ரியங்களோ ஜடமாகத்தான் அநுபவிக்கப்பட்டுவருகிறது. ஸுஷுப்தியில் ப்ராணன் இருந்தாலும் கர்மேந்திரியங்கள் இல்லை. கர்மேந்திரியங்களோடு கூடின ப்ராணனைத்தான் கோசமாகச் சொல்லவேண்டும். வெறும் காற்றை யாராவது ப்ராணமய கோசமென்று வ்யவஹரிப்பார்களா? ஆத்ம ஸ்வரூப ஸ்புரணத்திற்கு வெறும் காற்றானது ப்ரதிபந்தகமாகத்தான் ஆகுமா? ஆகையால் கர்மேந்த்ரியங்களோடு கூடின ப்ராணன்தான் ஆத்மஸ்வரூப ஸ்புரணத்திற்கு ப்ரதிபந்தகமாக ஆகிறபடியால் கோசமென்ற சப்தத்திற்கு வாச்யமாக ஆகும். ஸுஷுப்தியிலோ கேவலம் ப்ராணன் இருந்தாலும், கர்மேந்த்ரிய விசிஷ்டமான ப்ராணன் இல்லாததினால் விசிஷ்ட ப்ராணனென்ற ப்ராணமயகோசமே ஸுஷுப்தியிலும் இல்லை. அப்படியே ஸ்வப்னத்திலும் இல்லை. ஆத்ம ஸ்வரூபமோ ஸுஷுப்திக்கும் ஸ்வப்னத்திற்கும் ஸாக்ஷியாக விளங்குகிறது. ஆகையால் ப்ராணமயக் கோச

மும் ஆத்மாவாக ஆகாது. ஆத்மாவும் ப்ராணமயக் கோசமாக ஆகாது என்று ஆத்மாவுக்கும் ப்ராணமயக் கோசத்திற்கும் பெரியவை ரக்ஷிண்யம் ஸித்திக்கிறது.

அவ்விதம் மனோமயக்கோசமும் ஆத்மா ஆகாது. சக்ஷுரிந்திரம், க்ராணேந்திரயம், ரஸனேந்திரியம், ச்ரோத்ரிந்த்ரியம், த்வக்கிந்திரயம் என்ற ஐந்து ஞானேந்திரியங்களோடு கூடின மனதானது மனோமயக் கோசமென்று சொல்லப்படுகிறது. அந்த மனது ஜடமென்பது லோக ப்ரஸித்தமானது. அத்துடன் அந்த மனதானது ஒவ்வொரு நிமிஷத்திற்கும் ஒவ்வொரு அவஸ்தையை அடைந்து ப்ராந்தமாயும் சஞ்சலமாயும் அலைகிறது. ஆத்மஸ்வரூபமோ ஏகரூபமாயும் ஸகல அவஸ்தைகளுக்கு விலக்ஷணமாயும் விளங்கிவருகிறது. இவ்விதம் பரஸ்பரம் விருத்தமாயுள்ள ஆத்ம ஸ்வரூபத்தையும் மனதையும் எப்படி ஒன்றுபடுத்த முடியும். அத்துடன் ஸுஷுப்தி அவஸ்தையில் மனதே இல்லை. அதனால் மனோமயகோசம் ஸுஷுப்தி அவஸ்தையில் இல்லையென்று ஆகிறது. ஆத்ம ஸ்வரூபமோ ஸுஷுப்தி அவஸ்தையிலும் ஸுகமாகத் தூங்கினேனென்ற அனுபவத்தைக்கொண்டு விளங்கிவருகிறது. அப்படியே ஸ்வப்னாவஸ்தையில் மனது இருந்தாலும் ஞானேந்த்ரியங்களில்லை. ஞானேந்த்ரியங்களோடு கூட மனதல்லவா மனோமய கோசமாகும். கேவலம் மனதானது ஸ்வப்னத்திலிருந்தாலும் ஞானேந்த்ரிய விசிஷ்டமான மனது ஸ்வப்னத்தில் இல்லாததால் விசிஷ்டமானது என்ற மனோமய கோசமானது ஸ்வப்னாவஸ்தையில்லை ஆத்ம ஸ்வரூபமோ ஸ்வப்னப் பிரபஞ்சங்களுக்கும் ஸாக்ஷியாக விளங்கி வருகிறது. இவ்விதம் மனோமயகோசம் வ்யாவ்ருத்தமாயும் ஆத்ம ஸ்வரூபம் அனுவிர்த்தமாயும் மனோமயகோசம் ஜடமாயும் ஆத்ம



ஸ்வரூபம் சேதனமாயும் மனோமயகோசம் சஞ்சலமாயும் ஆத்ம ஸ்வரூபம் ஸ்திரமாயுமுள்ள அநேக காரணங்களால் மனோமயகோசமாக ஆத்ம ஸ்வரூபமானது ஆகாததைக்கொண்டு ஆத்மஸ்வரூபமானது மனோமயகோசத்திற்கும் விலக்ஷணமான வஸ்துதான்.

அவ்விதமே விஞ்ஞானமயகோசமும் ஆத்மா ஆகாது. விஞ்ஞானமய கோசமென்றால் ஞானேந்த்ரியங்களோடு கூடின புத்திதான் ஆகும். ஒரு வஸ்துவை நிச்சயம் செய்கிற மனதினுடைய விர்த்திக்கு விசேஷத்திற்கு புத்தியென்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. அந்த புத்திக்கும் ஸுஷுப்தி அவஸ்தையில் தனக்குக் காரமான அக்ஞானத்தின் லயம் ஏற்படுகிறது. ஆத்மாவுக்கோ அழிவில்லை. அக்காரணத்தினாலேயே புத்தியென்ற விஞ்ஞானமயக் கோசத்திற்கு ஆத்மாவானது விலக்ஷணமான வஸ்துத்தான். ஆனந்தமய கோசத்திற்கும் ஆத்மாவிலக்ஷணமானது. முன் ஜென்மாக்களில் செய்த புண்ய கர்மத்தின் வசத்தால் அழகான ஸ்த்ரீ முதலான விஷய சம்பத்து ஏற்படுகிறது. அந்த விஷய ஸன்னிதியில் அந்தக் கரணமானது விஷயாகாரமாக பரிணமிக்கிறது. அதாவது வ்யத்தினுடைய ஆகாரத்தைப்போலொத்த ஆகாரத்தோடுகூடினதாக ஆகிறது. அவ்விதம் சோபனவிஷயாகாரமான அந்தக் கரணவிர்த்தியில் பிர்ம்மத்தினுடைய ஆனந்தாம்சமானது ப்ரதிபிம்பிக்கிறது. அந்த விர்த்தி அந்தர்முகமாயும் அனுபவிக்கப்படுகிறது. அதனால் அந்தர்முகமாயும் ஆனந்த ப்ரதிபிம்பத்தோடு கூடினதாயுமுள்ள ஒரு அபூர்வமான அந்தக் கரணவிர்த்தியைத்தான் ஆனந்தமயக் கோசமென்று வேதாந்திகள் சொல்லுகிறார்கள். விர்த்திக்கும் விர்த்திமத்தான பதார்த்தத்திற்கும் அபேதமானதில் அந்தக் காரணத்திற்கும் அந்தக் காரணவிர்த்திக்கும் பேதமே இல்லை. அதனால் விர்த்தி

யில் ப்ரதிபிம்பித்த சைதன்யமும் அந்தக்கரணத்தில் ப்ரதிபிம்பித்த சைதன்யமும் ஒன்றானதினால் அந்தக் கரணத்தில் பிரதிபிம்பித்த சைதன்யமாகிற சிதாபாஸன் என்ற ஜீவனை ஆனந்தமயகோசமாக பர்யவஸிக்கின்றன. சிதாபாஸன் ப்ரதிபிம்பரூபனாகை ஆனபடியாலும் பிம்பம் ப்ரதிபிம்பத்திற்கு விலக்ஷணமாகவே லோகத்தில் அனுபவிக்கப்படுகிறபடியாலும் சிதாபாஸன், ஜீவன், ஆநந்த பிரதிபிம்பத்தோடுகூடின அந்தர்ரூபமான அந்தக்கரணவிர்த்தி, என்று அநேக பர்யாய சப்தாதிகளால் சொல்லப்படுகிற ஆனந்தமயகோசமானது ஆனந்தப்ரதிபிம்பமானதினால் ஆனந்த ஸ்வரூபியான ஆத்மா ஆனந்தமயகோசத்திற்கும் விலக்ஷணமான வஸ்துதான் என்று ஸித்தமாகிறது. இந்த ஆனந்தமய கோசமானது ஆகந்துகமாக ஏற்படுகிறது. ஆத்ம ஸ்வரூபமோ எப்பொழுதும் ஒரே ரூபமாக இருக்கிற வஸ்துவாக ஆகிறது. அப்படி எப்போதும் ஒரே ஸ்வரூபமாக இருக்கிற ஆத்மாவும் நடுவில் நடுவில் ஆகந்துகமாக வருகிற ஆனந்தமயகோசமும் ஒன்றாக ஆகாது. ஆகையால் ஆனந்தமயகோசத்திற்கு ஆத்மா நேர்விலக்ஷணந்தான். இவ்விதம் அன்னமயம், ப்ராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆனந்தமயம் என்று சொல்லப்படுகிற ஐந்துவிதமான கோசங்களுக்கும் ஆத்மஜ்யோதிஸ்ஸானது விலக்ஷணமாக விளங்கிவருகிறது. ஒரு ஜ்யோதிஸ்ஸை ஸ்படிகமயமான உறையினால் மூடி, அதற்குமேல் நிர்மலமான வெள்ளைக்கண்ணாடிமயமான உறையினால் மூடி, அதற்குமேலும் மலினமான வெள்ளைக்கண்ணாடியால் செய்யப்பட்ட உறையினால் மூடி அதற்குமேல் சிவப்புக் கண்ணாடியில் ஒரு உறை போட்டு அதற்குமேலும் காகிதத்தால் ஒரு கூடுசெய்து அமைத்திருக்கிறான். காகிதக்கூடு, சிவப்புக்கண்ணாடிக்கூடு, மலின வெள்ளைக் கண்ணாடிக் கூடு, நிர்மலமான வெள்ளைக்கண்ணாடிக் கூடு, ஸ்படிகமயமான கூடு,



199513

இந்த ஐந்து விதமான கூடுகளுக்கும் விலக்ஷணமாகத்தான் தீபஜ்யோதிஸானது இருந்து வருகிறது. அந்த தீபஜ்யோதிஸின் ப்ரபை ஸ்படிகத்தில் வீசி அங்கிருந்து நிர்மல வெள்ளைக் கண்ணாடியில் வீசி, அதன்மூலம் மலின வெள்ளைக் கண்ணாடியில் வீசி, அதன்மூலம் சிவப்புக்கண்ணாடியில் வீசி அதிலிருந்து காகிதத்திலும் வீசுகிறது. பார்ப்பவர்களுக்கோ அந்தப்ரபையானது காகிதத்தினுடைய தன்மையோ என்று தோன்றுகிறது. உண்மையில் காகிதத்தினுடையது இல்லை, சிவப்புக் கண்ணாடியினுடையதுமில்லை, மலின வெள்ளைக் கண்ணாடியினுடையதுமில்லை, நிர்மல வெள்ளைக் கண்ணாடியினுடையதுமில்லை, ஸ்படிகத்தினுடையதுமில்லை. மேல் சொன்ன ஐந்துகளுக்கும் விலக்ஷணமான தீபத்தினுடையதே.

அதுபோல் ஆத்மா ஒரு பெரிய தீபமாக விளங்கி வருகிறது. அந்த தீபத்திற்கு ஆனந்தமய கோசமானது ஸ்படிகமான கவர்போல் ஒரு கவராகவும், விக்ஞானமய கோசமானது நிர்மல வெள்ளைக் கண்ணாடியால் செய்யப்பட்ட கவரைப்போலொத்த கவராகவும், மனோமய கோசமானது மலினக்கண்ணாடியால் செய்யப்பட்ட கவரைப்போலொத்த கவராயும், ப்ராணமய கோசமானது சிவப்பு கண்ணாடியால் செய்யப்பட்டகவரைப்போலொத்தகவராகவும் அன்னமயகோசமானது காகிதத்தால் செய்யப்பட்ட கவரைப்போலொத்த கவராகவும் இருந்து வருகின்றன. அன்னமயகோசமென்ற சரீரமானது தமோகுணத்தின் கார்யமானதினால் காகிதத்தை த்ருஷ்டாந்தமாகவும், ப்ராணமயகோசமென்ற இந்த்ரியங்கள் ரஜோகுணத்தின் கார்யமானதினால் அதற்கு சிவப்புக்கண்ணாடியை த்ருஷ்டாந்தமாகவும், மனோமயகோசமென்ற மனது மலின ஸத்வ குணத்தின் கார்யமானதினால் அதற்கு மலின வெள்ளைக் கண்ணாடியை த்ருஷ்

டாந்தமாகவும், விக்ஞானமயகோசமென்ற புத்தியானது சுத்தஸத்வ குணத்தின் கார்யமானதினால் அதற்கு நிர்மலமான வெள்ளைக்கண்ணாடியை த்ருஷ்டாந்தமாகவும், ஆனந்தமயகோசமென்பது குணாதீதமானதினால் அதற்கு ஸ்படிகத்தை த்ருஷ்டாந்தமாகவும் அறிந்துகொள்ளவும்.

இந்த ஐந்துவிதமான கோசங்களுக்குள் ஆனந்தமயகோசமானது ஆத்மாவுக்கு ஸந்நிஹிதமாயிருப்பதினால் அந்த ஆனந்தமயகோசத்தில் ஆத்ம சைதன்யமானது வீசுகிறது. அதன் மூலமாக விக்ஞானமய கோசத்திலும், மனோமயகோசத்திலும், ப்ராணமயகோசத்திலும், அன்னமயகோசத்திலும் வீசி அந்தசைதன்யம் வீசுகிறபடியால், இந்த சைதன்யம் தேஹதர்மந்தானோ, தேஹந்தான் ஆத்மாவோ என்ற ப்ரமை ஏற்பட்டுவிடுகிறது. இதனால்தான் சிலர்கள் தேஹத்தை ஆத்மாவென்றும், சிலர்கள் இந்க்ரியங்களை ஆத்மாவென்றும், சிலர்கள்ப்ராணனை ஆத்மாவென்றும், சிலர்கள் மனதையே ஆத்மாவென்றும், சிலர்கள் புத்தியையே ஆத்மாவென்றும், சிலர்கள் ஆனந்தமயகோசமாகிற சிதாபாஸனை ஆத்மாவென்றும், நினைக்கிறார்கள். ஆசார்யபுருஷாளோ இந்த விபரீத பாவனையை நிவர்த்தி செய்து உண்மையான ஆத்மதத்வத்தை தைத்திரீயோபநிஷத் பாஷ்யத்தில் ப்ரகாசப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால் ஆத்மவஸ்து தேஹம் முதல் ஆனந்தமய கோசம் வரையிலுமுள்ள ஐந்துவிதமான அனாத்மா வஸ்துக்களைக் காட்டிலும் வேறு என்பது ஸந்தேஹமில்லை. அத்துடன் ஆத்மா ஸ்வயமாகவே ப்ரகாசிக்கும் தன்மையுள்ளது. ஆத்மா ப்ரகாசிப்பதற்கு மற்றொரு ப்ரகாசத்தின் அபேக்ஷை வேண்டாம். லோகத்தில் ப்ரகாசப்படுத்திவைக்கிற வஸ்துக்களுக்கு ப்ரகாசப்படுத்தி வைக்கும் சக்தியோ ஆத்மாவினுடைய



அதீனமாகத்தான் ஏற்படுகிறது. ஒருவன் ஒரு இருட்டறையில் ஒரு தீபத்தை ஏற்றிவைத்து ஒரு பெரியபாண்டத்தால் அதை மூடினான். அந்த பானையில் ஐந்து துவாரங்களிருந்தன. ஐந்து துவாரங்களில் ஒரு துவாரத்தின் அருகில் ஒரு வாஸனையுள்ள புஷ்பமும், மற்றொரு துவாரத்தின் அருகில் வீணையும், மற்றொன்றினருகில் ஒரு மாம்பழமும், மற்றொன்றினருகில் ஒரு ரத்னமும், மற்றொன்றினருகில் ஒரு சாமரமும் இருந்து வருகின்றன. ஒரு மனிதன் அந்த இருட்டறையில் போய் அவைகள் ஐந்தையும் கண்டான். கண்டதும் சாமரத்தைப் பார்த்து ஸ்பரிசத்தால் ஆனந்தத்தைக் கொடுக்கிற வஸ்துவென்றும், புஷ்பத்தைப் பார்த்து வாஸனையினால் மனிதனுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறதென்றும், ரத்னத்தைப்பார்த்து ஒளியால் மனிதனுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிற வஸ்துவென்றும், மாம்பழத்தைப்பார்த்து ரஸத்தால் மனிதனுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிற வஸ்துவென்றும், வீணையைப் பார்த்து சப்தத்தால் ஆநந்தத்தைக் கொடுக்கிற வஸ்துவென்றும் ஒன்றொன்றையும் உணர்ந்து அறிந்தான்.

அந்த மனிதன் போன இடமோ இருட்டறை. அவனுக்கோ, ரூபம், ரஸம், கந்தம், ஸ்பர்சம், சப்தமென்ற ஐந்து விஷயங்களினுடைய ஸ்ம்ருதி ஏற்பட்டதே அந்த ஐந்தும் ஸ்வயமாகப் ப்ரகாசித்ததென்று சொல்லலாமா? அல்லது அந்த இருட்டறைதான் ப்ரகாசப்படுத்தியது என்று சொல்லலாமா? அல்லது அந்த பாண்டந்தான் ப்ரகாசப்படுத்தியது என்று சொல்லலாமா? அல்லது அந்த பாண்டத்தின் ஐந்து துவாரங்களென்று சொல்லமுடியுமா? அல்லது ஐந்து துவாரங்களின் ஒவ்வொன்றின் அருகிலுள்ள, வீணை, சாமரம் புஷ்பம், மாம்பழம், ரத்னம் இவைகள் ப்ரகாசப்படுத்தினது என்று சொல்லமுடியுமா? முடியவே முடியாது. அவைகளுக்குச் சக்தியு

யில்லை. அந்த பாண்டத்திற்குள்ளிருக்கும் தீபத்தினுடைய கிரணங்கள்தான் பாண்டத்தின் துவாரங்கள் வழியாய் வெளியில் வீசி இருட்டையும் போக்கி மற்றவைகளை ப்ரகாசம் செய்து வைத்தது என்று சொல்லவேண்டும். அதுபோல் ஆத்மா ஒரு தீபமாகிறது, இந்த சரீரமானது அக்ஞானமாகிற இருட்டறையில் ஆத்மாவாகிற தீபத்தை மூடிவைக்கும் பாண்டமாக ஆகும். சக்ஷுரிந்த்ரியம், க்ராணேந்த்ரியம், ரஸனேந்த்ரியம், ச்ரோத்ரேந்த்ரியம், த்வக் இந்த்ரியம் என்ற ஐந்து இந்த்ரியங்களும் பாண்டத்தினுடைய ஐந்து துவாரங்களாக ஆகும். ரூபம், ரஸம், கந்தம், ஸ்பரிசம், சப்தம் என்ற ஐந்து விஷயங்களும் பாண்டத்தின் துவாரத்திலுள்ள ஐந்து பதார்த்தங்களாக ஆகின்றது. இந்த விஷயங்களோ, ஐந்து இந்த்ரியங்களோ, சரீரம் என்ற பாண்டமோ இவைகளெல்லாம் ஆத்மாவாகிற தீபத்தால் ப்ரகாசிக்குமன்னியில் ஸ்வயம் ப்ரகாசிக்க சக்தியற்றவைகள். ஆத்மாவும் ஸ்வயமாகவே தானும் ப்ரகாசித்துக் கொண்டு ஜகத்தையும் ப்ரகாசிக்கச் செய்கிறபடியால் ஸ்வயம் ப்ரகாச வஸ்துவாக ஆகிறது.

இந்த ஆத்மாவேதான் பரப்ரம்மம் என்று சொல்லப்படும். ஆத்மாவிற்கும் ப்ரம்மத்திற்கும் பேதமானது கொஞ்சமேனும் கிடையாது. ப்ரம்மத்திற்கு சொல்லப்படும் ஸ்வரூபதடஸ்த லக்ஷணங்களை வித்வான்களுடைய அனுபவத்தை அனுஸரித்து தேஹவிலக்ஷணமான ஆத்மஸ்வரூபனிடத்திலேயே அனுபவிக்கிறபடியால் ஆத்மாவே ப்ரம்மம் என்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆத்மாவே ப்ரம்மம் என்ற ஞானமும் குருவினுடைய அனுக்ரஹத்தால்தான் ஏற்படவேண்டும். முன் ஜன்மாக்களில் செய்த நிஷ்காமகர்மானுஷ்டான மஹிமையால் பரமேச்வர ப்ரஸாதத்தை அடைந்து அதனா



னால் அந்தக்கரணமானது பரிசுத்தமாய் த்ருட வைராக்யத்தை அடைந்து ஆத்ம தத்வத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்ற த்ருடமான இச்சையால் பரமகுருவையடைந்து குருவினுடைய அனுக்ரஹத்திற்கும பாத்ரமாய் அந்த அநவரதம் செய்யப்படும் வேதாந்த விசாரத்தால் ஆத்மாவே ப்ரம்மம் என்ற ஞானம் ஏற்படவேண்டும். அன்னியில் எவ்விதமான உபாயத்தாலும் மேல்சொன்ன ஞானமானது ஏற்படாது. இந்த ப்ரம்மஞானத்தால்தான் மோக்ஷமென்ற பரமபுருஷார்த்தத்தை அடையமுடியும். மோக்ஷம் என்ற பரமபுருஷார்த்தத்தின் ஸ்வரூபமோ பரமார்த்தமான ப்ரம்ம ஸ்வரூபத்தை ஜீவன் அடைந்து பரமானந்தத்தை அனுபவித்துக்கொண்டிருப்பதே. பரமார்த்தமான ப்ரம்மஸ்வரூபத்தையோ புதிதாக ஜீவன் அடையவேண்டியதொன்றுமில்லை. எப்பொழுதும் பரமார்த்த ஸ்வரூபமாகத்தான் ஜீவன் இருந்துவருகிறான். ஆயினும் அவித்யையிலும் அந்த ப்ரம்மபாவமானது மறைக்கப்பட்டிருக்கிறது. வித்யையினால் அவித்யையை நாசஞ்செய்துகொண்டபிற்பாடு அந்த ப்ரம்ம பாவமானது ப்ரகாசிக்க ஆரம்பித்துவிடுகிறது. அப்பொழுது, இப்பொழுதுதான் ப்ரம்ம பாவத்தை அடைந்தோமோ என்ற தோற்றம் ஏற்படுகிறது. அப்ராப்தமான வஸ்துவுக்கு உபாயத்தால் புதிதாக ஏற்படுகிற ப்ராப்தியானது வேதாந்த சாஸ்த்ரத்தின் ஸித்தாந்தமேயில்லை. ப்ராப்தமான வஸ்துவினிடத்தில் அவித்யையினால் ஏற்பட்ட அப்ராப்தத்வ ப்ரமத்தை நிவர்த்தி செய்துகொள்வதுதான் வேதாந்த சாஸ்த்ரத்தின் ஸித்தாந்த ரஹஸ்யமாகும்.

ஒரு மனிதன் தனது கழுத்தில் தங்கமயமான ஆபரணமொன்றை போட்டுக்கொண்டிருக்கிற வழக்கமுண்டு. அந்த ஆபரணத்தை சில ஸந்தர்ப்பத்தில் பெட்டியில் வைப்பதுமுண்டு. ஒரு

நாள் கழற்றிப்பெட்டியில் வைக்காமலே கழற்றிவைத்ததாகநினைத்துக் கொண்டுவிட்டான். ஆனால் அவன் கழுத்தில்தான் அந்த ஆபரணம் இருந்துவருகிறது. அவனுக்கு பெட்டியில் வைத்திருக்கிறதுபோல் ஒரு ப்ராந்தியேற்பட்டு பெட்டியைத் திறந்துபார்க்க ஆரம்பித்தான். பெட்டியிலே காணோம். ஆங்காங்கு தேட ஆரம்பித்தான். பிறகு அநேக ஜோஸ்யர்களிடம் நகையைப்பற்றி ப்ரச்னம்பண்ண ஆரம்பித்தான். அதில் ஒரு ஜோஸ்யர் கழுத்திலேயே இவனுடைய நகையிருப்பதை பார்த்து, தான் அதை கண்டுபிடித்து கொடுப்பதாக ஒப்பந்தம் பேசிக்கொண்டு கழுத்தில் நகையிருப்பதை ஆரூடம் வைத்துப் பார்த்துச் சொல்லிவிட்டான். இவன் கழுத்திலுள்ள நகையைச் சொல்லுவதற்கு ஆரூடத்தாலென்ன? நகையுள்ளவனுக்கும் புதிதாக நகை அகப்பட்டதுபோல் ஸந்தோஷமுண்டாயிற்று. இந்த த்ருஷ்டாந்தத்துக்கு அப்ராப்தத்திற்காகவா ப்ராப்தி ஏற்படுகிறது? இல்லவேயில்லை. ப்ராப்தமானநகையின் ப்ராப்திக்கு இவனுக்கு இருந்த அப்ராப்தத்வப்ரமையானது முன்சொன்ன ஆரூடத்தால் நிவர்த்தியாகிறது என்றதன்னியில் வேறொன்றும் புதிதாக ஏற்படவில்லை. அதுபோல் ஆசார்யாளுடைய உபதேசத்தால் இந்த ஜீவனுக்கு அப்ராப்தமான ப்ரம்மபாவத்துக்கு புதிதாக ஒரு ப்ராப்தி ஏற்படவில்லை. ப்ராப்தமான ப்ரம்ம பாவத்தினிடத்தில் அவித்யையினால் ஏற்பட்ட அப்ராப்தத்வ ப்ரமம்தான் நிவர்த்தியாகிறது. ஆகையினால், பரமார்த்த ப்ரம்ம ஸ்வரூபமாக இருக்கும் நிலைமையே மோக்ஷமென்ற பரம புருஷார்த்தமாகும். அந்த புருஷார்த்தத்தை அடையவோ ஆத்ம ஞானமானது ஸாக்ஷாத் ஸாதனமாக ஆகும். அந்த ஞானத்தை அடைவதான மார்க்கமானது ஏழு வகைகளாக சாஸ்த்ரத்தில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது (1) சுபேச்சை (2) விசாரணை (3) தனுமானஸீ (4) ஸத்வாபத்தி (5) அஸம்ஸக்தி (6) பதார்த்த அபாவனை (7) துரீயம்.



இதுகளில் நித்யாநித்யவஸ்து விவேகம், வைராக்யம், சமாதி ஷட்கஸம்பத்தி, முமுக்ஷுத்வம் என்ற ஸாதனசதுஷ்டயங்களையும் அடைந்து ஸத்குருவைத்தேடி வேதாந்த விசாரம் செய்யவேண்டுமென்ற ஆவலானது சுபேச்சை என்ற முதல் பூமியாக ஆகும். குருவைத்தேடி வேதாந்த ச்ரவணம் செய்துகொண்டு குரு உபதேசிக்கும் தத்வத்தை மனனம் செய்துகொண்டு ச்ரவணம், மனனம் இரண்டுமாகிற வேதாந்த விசாரமென்பது இரண்டாவதான விசாரணையென்ற பூமியாக ஆகும். அவ்விதமே ஸ்த்ரீ முதலான விஷயாதிகளை வெறுத்துவிட்டு லக்ஷ்யமான ப்ரம்மஸ்வரூபத்தையே எப்பொழுதும் இடைவிடாமல் த்யானம் செய்துவருவது தனுமானஸீயென்ற மூன்றாவது பூமியாக ஆகும். ப்ரம்மஸ்வரூபத்தை ப்ரத்யக்ஷமாக அனுபவித்து அந்த ஆனந்தப் பெருக்கில் முழுகிக்கொண்டிருக்கும் நிலை ஸத்வாபத்தியென்ற நாலாவது பூமியாக ஆகும். ப்ரம்மஸ்வரூபத்தை ப்ரத்யக்ஷமாகப் பார்த்த காரணத்தால் த்வைதப்ரபஞ்சவாழ்க்கையில் ஆவல் இல்லாதவனாய்க்கொண்டு அடிக்கடி ஸ்வரூப அனுஸந்தானம் பண்ணுகிற ஸமாதியிலேயே இருந்து வருகிற நிலை அஸம்ஸக்தி யென்ற ஐந்தாவது பூமியாக ஆகும். ப்ரபஞ்சமே தோன்றாமல் போய் தானாகப்ரபஞ்ச வாழ்க்கையில் விழித்துக்கொள்ளாமல் இதரர்களுடைய நிர்ப்பந்தத்துக்காக ப்ரபஞ்சத்தில் ஈடுபட்டவன் போல் வெளிக்குத் தோன்றினாலும் உண்மையில் எப்பொழுதும் ஸஹஜஸமாதியில் இருந்துகொண்டு ப்ரம்மானந்தத்தை அனுபவித்து வரும் நிலை பதார்த்த அபாவநிலை யென்ற ஆறாவது பூமியாக ஆகும். தானாகவும் ப்ரபஞ்ச வாழ்க்கையில் ஸம்பந்தப்படாமல் இதரர்களுடைய நிர்ப்பந்தத்திற்காகவும் ப்ரபஞ்ச வாழ்க்கையில் ஸம்பந்தப்பட்டவன்போல் தோன்றாமலும் எப்பொழுதும் நிர்விகல்ப ஸமாதியில் அமைந்துகொண்டு ப்ரம்மானந்தத்தை அனுபவித்து வரும் நிலை துரீயமென்ற ஏழாவது பூமியாக ஆகும்.

இந்த ஏழு பூமிகளுக்குள் ஒன்று முதல் மூன்றுமுடிய மூன்று பூமிக்குள்ளிருக்கிற ஸாதகர்களை ஜிஜ்ஞாஸுக்களென்றும் அவர்களுக்கு ஏற்பட்ட அவஸ்தையை ஜாக்ரமாகவும் த்வைதப்ரபஞ்சபாவனைகள் உண்டென்றும் சொல்லப்படுகிறது. நான்காவது பூமியிலுள்ள ஸாதகனை ப்ரம்மவித் என்றும் அவனுடைய அவஸ்தை ஸ்வப்னமென்றும் அவனுக்கு இந்த த்வைதப்ரபஞ்சமானது ஸ்வப்ன ப்ரபஞ்சத்துக்கு ஸமானமாக புலப்படுகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்தாவது பூமியிலுள்ளவனை வரன் என்றும் அவனுடைய அவஸ்தையே ஸுஷுப்தியாகவும் அவனுக்கு த்வைதப்ரபஞ்சமானது அடிக்கடி மறைந்துகொண்டும் சிலஸமயத்தில் புலப்பட்டுக்கொண்டும் அப்படி புலப்படுகிற ஸமயத்திலும் பொய்யாகவே புலப்பட்டுக் கொண்டு வருமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆறாவது பூமியிலுள்ள ஸாதகனை வரீயானென்றும் அவனுக்கு அவனுடைய முயற்சியால் ப்ரபஞ்சம் புலப்படாதென்றும், இதரர்களுடைய நிர்ப்பந்தத்தால் ப்ரபஞ்சத்தில் விழித்துக்கொண்டாலும், உடனே திரும்பவும் ப்ரம்மானந்த ஸாகரத்திலேயே முழுகிவிடுவானென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஏழாவது பூமியிலுள்ள ஸாதகனை வரிஷ்டன் என்றும் அவன் தானாகவும் ப்ரபஞ்சத்தில் விழித்துக்கொள்ள மாட்டான். அன்னியர்களின் நிர்ப்பந்தத்தாலும் விழித்துக்கொள்ளமாட்டான். எப்பொழுதுமே ப்ரம்மத்தினிடத்தில் பரிநிஷ்டிதனாக இருந்துகொண்டு நிஜானந்தத்தை அனுபவித்து வருகிறானென்று சொல்லப்படுகிறது. இவ்விதமான ஏழுவிதமான ஞானபூமிகளுக்குள் ஏதாவது ஒரு பூமியிலாவது ஆரோஹணம் ஏற்பட்டால்தான் இந்த புண்ய பூமியில் கிடைத்த மானிட ஜன்மா ஸபலமாக ஆகும். இவ்விதமான ஞானத்தில் ப்ரகாசிக்கிற ஆத்மாவே ஜீவன் ஈச்வரன் என்று வ்யவஹார தசையில் உபாதி[illegible]த்தை அனுஸரித்து வெவ்வேறு பேரா பிரிக்கப்பட்டிருக்கிறது.

179515

———

(தொடரும்)

600 003

Regd.No. M-2970. Regd.No. M-2970

# சந்தாதார்களுக்கு:

நான்காவது ஆண்டு சந்தாவை

1936வருஷம் ஆகஸ்டுமீ 15உக்குள்

அனுப்பிவையுங்கள்.

---

40 பக்கங்களுடன் வெளிவரும்.

---

ஒவ்வொரு இங்கிலீஷ் மீ முதல்தேதி தோறும்

வெளிவரும்.

---

வருஷ சந்தா:

| | | |
|---|---|---|
| மதுரைக்கு | ... ... | 1—0—0 |
| வெளியூர்களுக்கு | ... | 1—6—0 |
| வெளிநாடுகளுக்கு | ... | 3—0—0 |

**மானேஜர்**

82, புதுத்தெரு, மதுரை.

Edited and published by Thethiyur Subramanya Sastrigal,
and printed at the Harisamaya Divakaram Press, Madura.